**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் - PB 67**

<u>இணையவழிக் கூட்டத் தளத்தினூடான அதிவிசேட பொதுக் கூட்டத்திற்கான வழிகாட்ட் ல்கள் மற்றும் பதிவுசெய்தல் செய்முறைகள்</u>

| |
|---|
| இணையவழிக் கூட்டத் தளமொன்றினூடாக நடைபெறவுள்ள சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் அதிவிசேட கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் பங்குடமையாளர்கள்/ பதிலாட்கள் திறன் தொலைபேசியை அல்லது மேசைக் கணனியொன்றைப் பயன்படுத்தி அவ்வாறு கலந்து கொள்ளலாம்.<br><br>பங்குடமையாளர்/ பதிலாளொருவர் திறன் தொலைபேசியூடாக அதிவிசேட கூட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புமிடத்து அவர்/ அவள் "ஷூம் செல்லிடத் தொலைபேசி செயலியை" அவரின்/ அவளின் தொலைபேசிக்கு பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் வேண்டும்.<br>அதேபோன்று, பங்குடமையாளர்/ பதிலாளொருவர் மேசைக் கணனியூடாக கலப்பு அதிவிசேட பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்புவாராயின் தொடர்பான மேசைக் கணனிக்கு (பொருத்தமான வெப்புறோசர்: கூகிள்குறோம்) "ஷூம் டெஸ்க்ரொப் செயலியை" பதிவிறக்கம் செய்வதன் மூலம் திறந்து கொள்ளலாம். |

1. ஒன்றில் தாமாகவோ அல்லது அவர்களின் பதிலாளூடாகவோ சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் அதிவிசேட கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் பங்குடமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ள பதிவுசெய்தல் படிவத்திலுள்ளவாறு தமது விபரங்களை கம்பனிச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேடடுக் கொள்ளப்படுகின்றனர்.

2. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட பதிவுசெய்தல் படிவத்தினை கம்பனிச் செயலாளர், எயார்லையின் சென்ரர், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், கடடு நாயக்கா என்ற முகவரிக்கு அல்லது comsec@srilankan.com ஊடாக அல்லது 94197335112 இற்கு தொலைநகல் மூலம் அல்லது 2024 யூன 23ஆம் திகதி பி.ப. 3.00 மணியளவில் கம்பனி செயலாளர் பெறத்தக்க விதத்தில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. பதிலாள் ஊடாக கூட்டத்தில் பங்கேற்பதாக இருப்பின், சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட பதிலாள் படிவத்தினை கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமான "சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்", எயார்லையின் சென்ரர், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், கடடு நாயக்கா என்ற முகவரியில் 2024 யூன 23ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கூட்டம் நடைபெறவுள்ள நேரத்திற்கு 48 மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் கடட் ாயம் சேர்ப்பித்தல் வேண்டும்.

<u>குறிப்பு</u>:
பதிலாளொருவர் நியமிக்கப்படுவாராயின், பதிலாள் தொடர்பான பதிவுசெய்தல் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் பங்குடமையாளரினால் சமர்பப் ிக்கப்படுகின்ற சரியாகப் பூர்தத் ி செய்யப்பட்ட பதிலாள் படிவத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களுடன் ஒத்துச்செல்வதாக இருத்தல் வேண்டும்.

4. கம்பனி, மேலே குறிப்பிடப்பட்டவாறு பெறப்பட்ட அனைத்துப் பதிவுசெய்தல் கோரிக்கைகளையும் அடையாளப்படுத்தல் விபரங்களையும் பங்குடமையாளரின் பதிவேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களுடன் சரிபார்த்ததன் பின்னர் கோரிக்கை மற்றும் அதற்கு ஆதரவான ஆவணங்கள் (ஏதேனுமிருப்பின்) தொடர்பில் திருப்திப்படுமாயின் அதிவிசேட பொதுக் கூட்டத்திற்கான பதிவுகளை ஏற்றுக்கொள்ளும்.

பதிவுசெய்தல் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பங்குடமையாளர்கள் அவர்களது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற மின்னஞ்சல் மூலமான உறுதிப்படுத்தலை கம்பனியிலிருந்து பெற்றுக்கொள்வர்.

5. பதிவுசெய்தல் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பங்குடமையாளர்கள் அதிவிசேட கூட்டம் ஆரம்பமாவதற்கு 24 மணித்தியாலங்கள் முன்னதாக கம்பனியிலிருந்து மேலுமொரு மின்னஞ்சலைப் பெற்றுக்கொள்வர். அம்மின்னஞ்சலானது "மெய்நிகர் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு பதிவுசெய்தல்" எனக் குறிப்பிடப்படும் இணையவழிப் பதிவுசெய்தலுக்கான இணைப்பினை வழங்கும். பங்குடமையாளர் செல்லுபடியாகக்கூடிய பதிலாளை நியமித்திருப்பாராயின் இம்மின்னஞ்சல் தொடர்பான பதிலாளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

6. (i) மேலே பந்தி 5இல் குறிப்பிடப்பட்டவாறு, கம்பனியினால் அனுப்பி வைக்கப்படவிருக்கும் வெப் இணைப்பினைப் பயன்படுத்துமாறும் கலப்பு வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான இணையவழி பதிவுசெய்தலை நிறைவுசெய்யும் விதத்தில் "மெய்நிகர் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான பதிவுசெய்தல்" மீது கிளிக் செய்யுமாறும் பங்குடமையாளர்/ பதிலாட்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ii) "மெய்நிகர் அதிவிசேட கூட்டத்திற்கான பதிவுசெய்தல்" இணைப்பினை கிளிக் செய்ததும் பங்குடமையாளர்/ பதிலாள் இடைமுகமொன்றிறகு் மீளநெறிப்படுத்தப்படுவர். இங்கு அவர்கள் அவர்களது முதல் பெயர், இறுதிப் பெயர், மின்னஞ்சல் முகவரி, மீளப்பதிவு செய்யும் மின்னஞ்சல் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அலுவலர் இலக்கம் என்பனவற்றைப் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவர் (இவ்விபரங்களைப் பதிவுசெய்யும் பொழுது ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் இணையவழியில் நுழைவதற்குத் தடையாக அமையக்கூடும் என்பதனால் பங்கேற்பவர்கள் குறிப்பிட்ட இணையவழிப் பதிவுசெய்தல் செய்முறைக்காக மேலே பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட பதிவுசெய்தல் படிவத்தில் உள்ளடக்கப்பட்ட சரியான தகவல்களை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).

(iii) மேலே 6(ii)இல் குறிப்பிடப்பட்டவாறு, விபரங்களைப் பதிவுசெய்வதனை வெற்றிகரமாகப் மேற்கொண்டதன் பின்னர் பங்கேற்பாளர்கள் "பதிவுசெய்தல்" என்பதன் மீது கிளிக் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். இது அவர்களது திரையில் உடனடியாகத் தோன்றி கூட்டத்திற்கான இணைப்பினை அவர்கள் பெறுவதனை இயலுமைப்படுத்தும்

7. மேலேயுள்ள 6இல் குறிப்பிடப்பட்டவாறு, அவர்களது இணையவழி பதிவுசெய்தலை வெற்றிகரமாக நிறைவுசெய்த பங்குடமையாளர்கள் "சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் மெய்நிகர் அதிவிசேட கூட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்" எனக் குறிப்பிடப்பட்ட கூட்டத்தில் பங்கேற்பதற்கான நுழைவு இணைப்பினையும்` அறிமுக விபரங்களையும்` பெற்றுக்கொள்வர்.

8. மெய்நிகர் அதிவிசேட கூட்டத்தில் இணைந்து கொள்ளும் பொருட்டு பங்கேற்பாளர்கள் “சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் மெய்நிகர் அதிவிசேட கூட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்” இனைக் கிளிக் செய்து கொள்ளுமாறு கேட்டு க் கொள்ளப்படுகின்றனர். சில சந்தர்பப்ங்களில் கணனி முறைமை அறிமுக விபரங்களைக் கோருகின்ற போதும் அது தேவைப்படுகின்றவிடத்தும் மெய்நிகர் அதிவிசேட கூட்டத்தினை அணுகுவதற்கான வசதியைப் பெறுவதற்கு அறிமுகத்தினைப் பதியவும்.

9. இச்செய்முறைகள் நிறைவடைந்ததும் நீங்கள் மெய்நிகர் அதிவிசேட பொதுக்கூட்ட ஷூம் தளத்திற்கு நெறிப்படுத்தப்படுவீர்கள். அங்கு நீங்க்ள் மெய்நிகர் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற முடியும்.

| |
|---|
| பங்குடமையாளர்கள்/ பதிலாடக் ள் மேலேயுள்ள 6, 7, 8 மற்றும் 9ஆம் பந்திகளில் தெரிவிக்கப்படட் செய்முறைகளப் பூர்த்தி செய்ததும் அதிவிசேட பொதுக்கூட்டம் ஆரமப ிப்பதற்கு குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்களுக்கு முன்னராவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு விதந்துரைக்கப்படுகிறது. இணையக் கூட்டத்தளம் கூட்டம் தொடங்குவதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முப்பது (30) நிமிடங்கள் முன்னதாக செயற்படத் தொடங்கும். |

10. பங்குடமையாளர்கள்/ பதிலாடக் ள் தமது கேள்விகளை அல்லது கரிசனைகளை தட்டச்சு வடிவத்தில் அல்லது வாய்மொழி மூலம் சமர்பப ிப்பதற்கு திரையில் தோன்றுகின்ற கேள்வி மற்றும் விடை வசதியை அல்லது கையை உயர்த்தும் ( ) அடையாளத்தினைப் பயன்படுத்த முடியும். முறைமையானது, ஒலிவாங்கியை ஒலிக்கச் செய்து காணொளித் தேர்வினை அனுமதிக்கின்ற விதத்தில் திடீரெனத் தோன்றும் செய்தியொன்றினை அனுமதிக்கும். <u>பங்குடமையாளர்கள் தீர்மானஙகள் தொடர்பில் ஏதேனும் கேள்விகளைக் கேட்கவிருப்பின் முன்கூட்டியே ஒன்றில் மின்னஞ்சல் மூலமோ அல்லது அஞ்சல் மூலமோ சமர்பப ிக்குமாறு கேடடு க் கொள்ளப்படுகிறார்கள்.</u>

11. தகுதியுள்ள அனைத்து பங்குதாரர்கள் மற்றும் ப்ராக்ஸி வைத்திருப்பவர்கள் தொடர்பாக மேலே 8 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள செயல்முறையை முடித்த பிறகு, பெரிதாக்கு இடைமுகத்தில் தோன்றும் வாக்கெடுப்பு அம்சத்தின் மூலம் விவாதத்தில் உள்ள தீர்மானங்களில் வாக்களிக்க வேண்டும். கேட்கப்படும் போதுஇ மெய்நிகர் பங்கேற்பாளர்கள் 17 மே 2023 தேதியிட்ட அதிவிசேட பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிக்க ஜூம் பயன்பாட்டின் மூலம் தங்கள் விருப்பப்படி நேரடியாக வாக்களிக்கலாம்.

12. மெய்நிகர் ரீதியாக இணைக்கப்பட்ட பங்குடமையாளர்கள்/ பதிலாட்களுக்கு கம்பனி வாக்களிப்பதற்காக ஷூம் ஊடாக திடீரெனத் தோன்றும் திரையொன்றினை அனுப்பும். பங்குடமையாளர்கள் தங்கள் தற்றுணிபின்படி வாக்களித்ததன் பின்னர் பதிலிறுப்புக்களை கம்பனி பெறுகின்றமையினை இயலுமைப்படுத்தும் விதத்தில் ‘‘சமர்ப்பித்தல்’’ (submit) இனைக் கிளிக் செய்து கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகிறார்கள;.

13. தீர்மானத்தின் மீதான வாக்களிப்பினை பிரகடனப்படுத்தும் பொழுது தலைவர் மெய்நிகர் அடிப்படையில் பங்கேற்கின்ற பங்குடமையாளர்/ பதிலாளின் வாக்களிப்பினைக் கணக்கில் எடுத்துக்கொள்ளுவார். அத்தகைய பங்குடமையாளர்களின் வாக்குகள் கையை உயர்தத் ிக் காட்டுவதன் மூலம் கணக்கிடப்பட்டு இணையவழி முறைமையூடாகச் சேகரிக்கப்பட்டு, இணையவழி பங்குடமையாளர்களின் வாக்குகளுடன் சேர்க்கப்படும்.

14. பங்குடமையாளர்கள்/ பதிலாட்கள் ஒவ்வொரு தீர்மானம் தொடர்பிலும் அவர்களது வாக்குகளை அளிப்பதற்கு 60 விநாடிகள் ஒதுக்கப்படும். வாக்களிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நேரம ் முடிவடைந்த பின்னர் பெறுபேறுகள் செய்முறைப்படுத்தப்பட்டு தலைவரினால் 15 விநாடிகளில் அறிவிக்கப்படும்.

15. வாக்களிப்பினை நடத்துமாறு கோரப்படுகின்ற சூழ்நிலையில் பங்குடமையாளர்கள் வாக்களிப்பிற்காக குறிப்பிடப்பட்டதையொத்த பொறிமுறையில் வாக்களிக்குமாறு கேடடுக் கொள்ளப்படுவர். கூட்டத்தின் தலைவரினால் இது வழிநடத்தப்படு

| |
|---|
| குறைந்தபட்சம் 3 மணித்தியாலங்களுக்கு முன்னதாக அதிவிசேட பொதுக் கூட்டத்தினை இணையவழியில் அணுகுவது பற்றி பரிசோதித்துக் கொள்ளுமாறும் உங்கள் சாதனங்கள் செவிப்புல ஒலி முறைமைகளைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது. இதன் மூலம் நீங்கள் அதிவிசேட பொதுக் கூட்டத்தில் வசதியாக பங்குபற்ற முடியும். |